செ.வெ.எண்-51 நாள்-31.07.2021

# அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை ஒப்பந்த அடிப்படையில் பணியிடங்கள் அறிவிப்பு.

கோவிட் - 19 பேரிடர் மற்றும் கொரோனா நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்வதற்காக அரியலூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு கீழ்கண்ட பணியிடங்களுக்கு தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் 6 மாதங்களுக்கு மட்டும் தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்க்கப்படுகின்றன.

ரேடியோகிராபர் 05 பணியிடங்களும், டயாலிசஸ் டெக்னிசியன் 10 பணியிடங்களும், இ.சி.ஜி டெக்னிசியன் 05 பணியிடங்களும், சி.டி. ஸ்கேன் டெக்னிசியன் 05 பணியிடங்களும், மயக்கவியளாளர் 15 பணியிடங்களும், மருந்தாளுநர்கள் 05 பணியிடங்களும் தலா ரூ.12,000/- மாதம் ஊதியம் அடிப்படையிலும், லேப் டெக்னிசியன் 05 பணியிடங்கள் ரூ.15,000/- மாத ஊதியம் அடிப்படையிலும் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்க்கப்படுகின்றன.

இப்பணியிடங்கள் முழுவதும் முற்றிலும் தற்காலிகமானது மற்றும் ஒப்பந்தம் அடிப்படையில் 6 மாதங்களுக்கு மட்டும் நிரப்பப்பட உள்ளது. மேலும், இப்பணியிடங்கள் எக்காரணங்கள் முன்னிட்டும் பணி வரன்முறை அல்லது நிரந்தரம் செய்யப்படமாட்டாது. மேலும் தகுதியும் விருப்பமும் உள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது கல்வி தகுதியின் சான்றிதழ்களின் நகல்கள், புகைப்படத்துடன் முதல்வர், அரசு அரியலூர் கல்லூரி மருத்துவமனை அரியலூர் - 621704 என்ற முகவரிக்கு 10.08.2021-க்குள் நேரிலோ அல்லது தபால் மூலமாகவே அனுப்பி வைக்க வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**